# திருக்குறள்

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது

## விளக்கம்:-

இனிய சொற்களின் நன்மையை உணர்ந்தவர்கள் கடும் சொற்களை கூறுவது எதற்கு?

## பணிவுடையன் இன்சொல்லன் ஆதல்  ஒருவற்கு அணியல்ல மற்றுப் பிற

### விளக்கம்:-

பணிவும் இன்சொல்லும் ஒருவற்கு அணியாகும். இத்தகைய நற்பண்பு உடையவர்களுக்கு பிற அணிகலன்கள் தேவையில்லை.

## இனிய உளவாக இன்னாத கூறல்
## கனியிருப்பக் காய் கவர்ந்தற்று

விளக்கம்:-

கடுமையான சொற்களைக்(பிறரை புன்படுத்தும்படும்படியான) கூறுவது கனியிருக்கும் போது காய் உண்பது போன்றதாகும்.

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**
**பிற்பகல் தாமே வரும்**

## விளக்கம்:-

நாம் ஒருவற்கு திங்கிளைத்தால் அது நம்மையே வந்தடையும். காலையில் நாம் ஒருவரை காயப்படுத்தினால் மாலையில் அச்செயல் நமக்கும் ஏற்படும்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்

விளக்கம்:-

நமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் நாம் நன்மையே செய்ய வேண்டும்.